கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

தை மாத இதழ்
NEWS BULLETIN
JANUARY 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட , கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்ககொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
07/02/21 இரவு 7 மணி முதல்	கவியுலகப் பூஞ்சோலை நடாத்தும் 221 மணிநேர சாதனை நிகழ்வில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் " பாரதியின் தமிழ்ப் பற்று" என்னும் தலைப்பில், 4 மணிநேர நிகழ்வினைச் செய்யவிருக்கிறது. இதில் பங்குபற்ற விரும்பும் பெற்றோர்கள் 01/02/21 முன்பு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
சித்திரை	OFAAL எழுத்துப் பரீட்சை எதிர்வரும் சித்திரை மாதம் நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 01/03/2021

கொரோணா காலத்திலும் தொடர்ந்து பயணிக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

உலகமே முடங்கிப் போயிருக்கும் இந்தக் கொரோணா ஆட்சிக் காலத்திலும், இணையவழி மூலம் தன்னுடைய சேவைகளைத் தமிழ் மாணவர்களுக்கு முடிந்தளவு முனைப்புடன் செய்துவருகின்ற, கொவன்றியிலுள்ள ஒரே நிறுவனம் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் என்பதில் கொவன்றிவாழ் தமிழர்களாகிய நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

எமது தமிழினத்தின் அடையாளமாகப் **பாமுகம்** நடத்திய உலகத் தமிழ் மொழி நாள் கொவன்றியிலே 09.01.2021 சனிக்கிழமை இணைய வழியில் நடைபெற்றது. அதில் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலையிலிருந்து பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றைத் தொகுத்து வழங்கியவர்களும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களே.



கொவன்றி தமிழர் நலன்பரிச்சங்கத் தலைவரின் வாழ்த்துரை
1.அருஷ்னி விஜயரூபன்.....அபிநயப்பாடல்
2.தருண்யா பகீரதன்.....பேச்சு
3.ஈஸ்வர்சாய்ஸ்ரீராம் வெங்கடேஸ்பெருமாள்.....திருக்குறள்
4.ஹாசினி பாரதிராஜா.....பாடல்
5.ஈஷாபூர்ணிகா வெங்கடேஸ்பெருமாள்.....பேச்சு
போன்றவைகளும்
6.கவியரங்கம் (வீழ்வோமா எழுவோமா)
1.சந்திரமோகன் நந்திதா
2.சந்திரமோகன் நர்மதா
3.குகநாதன் ஜனுஜா
4.கேதீஸ்வரராஜா மாதவ்
5.மதுஷன் முகுந்தன்
6.யதுநந்தன் ரவிகாந்தன்

ஆகியோர் கவி வடிக்க, ஆசிரியர் திருமதி பைஷா அவர்கள் கவியரங்கத்துக்குத் தலைமை தாங்கினார். உலகெங்கும் இருந்து பல பார்வையாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தது மகிழ்ச்சியாக இருந்தது. அனைத்து நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக இருந்தன. பங்குபற்றிய எல்லோருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் அன்போடு தெரிவித்துக்கொள்கிறது.

சாதனை மாணவர் விருது 2021



இந்தியாவிலுள்ள இனிய நந்தவனம் பவுன்டேஷன் நடாத்திய 2021ஆம் ஆண்டிற்கான சாதனை மாணவர் விருதுக்குத் தெரிவாகிய 32 வெளிநாட்டு மாணவர்களில், கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலையிலிருந்து உயர்தரம் கற்கும் இரு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களுக்குக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

"தமிழர் கலைகளும், பண்பாடும் அமிர்தமாய் நெஞ்சில் ஊறட்டும்"



இனிய நந்தவனத்தின் பெப்ரவரி மாத இதழில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் உயர்திரு கந்தையா அரியரத்தினம் அவர்களின் தமிழர் கலைகள் மற்றும் பண்பாடு பற்றிய பதிவு இடம்பெற்றுள்ளது.

தமிழர் பண்டிகை தைப்பொங்கல்

பழங்காலத்தில் நெற்பயிர் விதைத்து அறுவடை செய்யக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். ஆடியில் விதைத்த பயிர் நன்கு விளைச்சலை அடைந்து அறுவடை செய்யத் தயாராகும் மாதமே தை. தமிழரின் நீண்ட நெடுங்காலப் பயிர் இந்த நெல். நெற்சோறு என்பது அந்தக் காலத்தில் அடிக்கடி சமைக்கமாட்டார்கள். விசேட நாட்களில் மட்டுமே நெற்சோறு சமைப்பது வழக்கம். தினமும் நெற்சோறு உண்டால் அவர் அந்த ஊரின் செல்வந்தர் என்பர். எனவே, "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழி உருவானது. காளைகளுக்கு வைக்கோல் கிடைக்கும். விவசாயிகளுக்கு நெல் மணிகள் கிடைக்கும்.



